## வங்கதேசத்திலிருந்து

# 35 தமிழர்கள் தாயகம் திரும்புகின்றனர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கை!

சென்னை, ஜூலை 22-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நடவடிக்கையினால் வங்கதேசத்திலிருந்து 35 தமிழர்கள் தாயகம் திரும்புகின்றனர்.

இதுபற்றிய விவரம் வருமாறு:-

வங்கதேசத்தில் தற்போது நிலவும் பதற்றமான சூழ்நிலை காரணமாக தமிழர்கள் சிலர் தாயகம் திரும்ப இயலாமல் அங்கு சிக்கியிருப்பதாக தகவல்கள் வரப்பெற்றுள்ளன.

வங்கதேசத்தில் உள்ள இந்திய தூதரகம் அங்கு உள்ள இந்தியர்களின் பாதுகாப்பை கருதி, உள்ளூர் பயணங்களைத் தவிர்க்கவும், அவர்கள் வசிக்கும் வளாகத்திற்கு வெளியே தங்கள் நடமாட்டத்தைக் குறைக்கவும் அறிவுறுத்தியுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகத்தை, வங்கதேசத்தில் உள்ள தமிழர்களின் விவரங்களைப் பெற்று, அவர்களுக்குத் தேவைப்படும் அனைத்து உதவிகளையும் விரைந்து வழங்கிடுமாறு உத்தர விட்டுள்ளார்.

**தமிழ்நாடு அரசு தயார் நிலையில் உள்ளது!**

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் அங்குள்ள இந்திய தூதரகம் மற்றும் தமிழ் அமைப்புகளை தொடர்பு கொண்டுள்ளது.

மேலும், அங்குள்ள நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, தமிழர்களுக்குத் தேவைப்படும் உதவிகளை செய்ய தமிழ்நாடு அரசு தயார் நிலையில் உள்ளது.

வங்கதேசத்தில் உள்ள தமிழர்களின் குடும்ப உறுப்பினர்கள், தங்களுக்கு உதவி தேவைப்படும் நிலையில், தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலத்துறையின் 24x7 கட்டணமில்லா உதவி எண்களை தொடர்புகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்தியாவிற்குள் +91 1800 309 3793

வெளிநாடு +91 80 6900 9900

தொடர்புக்கு +91 80 6900 9901

இந்நிலையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நட வடிக்கை அடுத்து,வங்கதேசத்தில் சிக்கிய தமிழர்களை அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வங்கதேசத்தில் இருந்து தாயகம் திரும்ப முடியாமல் சிக்கியுள்ள தமிழர்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தலில் இந்திய தூதரகத்தின் ஒத்துழைப்போடு அழைத்துவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**முதற்கட்டமாக 35 பேர்!**

முதற்கட்டமாக இரு விமானங்கள் மூலம் 35 தமிழர்கள் தாயகம் திரும்பவுள்ளனர்; அடுத்தகட்டமாக 60 பேரை அழைத்துவரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு தெரி வித்துள்ளது.

---

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமை! டி.பி.எம்.மைதீன்கான் - ராபர்ட் புரூஸ் எம்.பி. - மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# திருநெல்வேலியில் 27 புதிய பேருந்துகள்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

நெல்லை. ஜூலை.22-

திருநெல்வேலி மண்டலத்தில் 27 புதிய பேருந்துகள் இயக்கத்திற்கான துவக்க விழா நிகழ்வு நெல்லை சந்திப்பு பெரியார் பேருந்து நிலையத்தில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான்,நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், மாநகராட்சி மேயர் (பொறுப்பு) கே.ஆர். ராஜு,மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பங்கேற்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பேருந்துகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

நிகழ்வில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேசியதாவது.

முதலமைச்சர் அவர்கள் சாமானிய மக்களுக்காகவும் ஏழை,எளிய மக்களுக்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.தாய்மார்கள் பேருந்துகளில் கட்டணம் செலுத்தி பயணம் மேற்கொண்டு வருவதை கவனித்து முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு முதலாவதாக மகளிர் விடியல் பயணம் திட்டம் என்ற திட்டத்தினை தொடங்கி மகளிர் நகரப் பேருந்துகளில் ஒரு நாளைக்கு எத்தனை முறை பயணித்தாலும் கட்டணம் இல்லாமல் பயணிக்கலாம் என அற்புதமான திட்டத்தை சாமானிய மக்களுக்கு,ஏழை, எளிய,மக்களுக்கு வழங்கி உள்ளார்.

திருநெல்வேலி மண்டலத்தில் இன்று 27 புதிய பேருந்துகள் சேவை பொது மக்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைக்கப்பட்டுள்ளது.திருநெல்வேலி, தென்காசி,தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு 816 நகரப் பேருந்துகளும்,845 புறநகர் பேருந்துகளும் என மொத்தம் 1661 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது.நாளொன்றுக்கு சுமார் 13.50 லட்சம் மக்கள் பயணம் செய்து வருகிறார்கள். முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் மக்கள் பாதுகாப்புடன் இருக்கிறார்கள்.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார்.

முன்னதாக போக்குவரத்து துறை அமைச்சர் எஸ். எஸ்.சிவசங்கர் பேசியதாவது.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு போக்குவரத்து துறைக்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து சிறப்பான துறையாக போக்குவரத்து துறை வளர்ச்சி அடைந்துள்ளது.மகளிர் விடியல் பயணம் எனும் சிறப்புமிக்க திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் பதவியேற்று அன்று தொடங்கி வைத்தார்கள்.விடியல் பயணத் திட்டத்தின் மூலம் போக்குவரத்துறை விடியலை பெற்றிருக்கிறது.மகளிர் விடியல் பயணம் நிதியாக இந்த ஆண்டு ரூபாய் 2,500 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.மேலும் டீசல் மானியம் இலவச பஸ் பாஸ் மானியம், தருகிறார்கள்.இதன் மூலம் இன்றைக்கு போக்குவரத்து துறை சிறப்பாக செயல்படுகிறது.முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2006 2011ம் ஆட்சி காலத்தில் 15,000 புதிய பேருந்து வாங்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இயக்கப்பட்டது.அதன் பிறகு கடந்த 10 ஆண்டு ஆட்சி காலத்தில் குறைவான பேருந்துகள் வாங்கியதன் காரணமாக பொதுமக்கள் பயணம் மேற்கொள்வதற்கு சிரமம் ஏற்பட்டது. கடந்த ஆட்சி காலத்தில் போக்குவரத்து துறைக்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. தற்போது முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு கடந்த ஆட்சி காலத்தில் விட்டு சென்ற பொருளாதார நெருக்கடியினை சரி செய்து போக்குவரத்து துறையினை சிறப்பாக வழி நடத்தி வருகிறது.போக்குவரத்து ஊழியர்களுக்கு மாதம் சம்பளம் சரியான முறையில் கிடைத்து வருகிறது.

குக்கிராமங்கள் வரைக்கும் பொதுமக்கள் வசதிக்காக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது.இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அதிக அரசு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது.பிற மாநிலங்களில் 20 சதவீதம் பேருந்துகள் கூட அரசின் மூலம் இயக்கப்படுவது கிடையாது.

தற்போது முதலமைச்சர் அவர்கள் 7,600 புதிய பேருந்துகள் வாங்க நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.அதன் ஒரு பகுதியாக 1000 ம் புதிய பேருந்துகள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாகவே பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. தொடர்ந்து ஒவ்வொரு மண்டலமாக புதிய பேருந்துகள் தொடங்கப்பட்டு வருகிறது.இன்று திருநெல்வேலி மண்டலத்தில் 27 புதிய பேருந்துகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டது.பேருந்து தயாரிப்பு நிறுவனங்கள் பேருந்துகளை தயாரித்து தரதர மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும். நடப்பு 20242025 ஆம் நிதியாண்டில் 302 புதிய பேருந்துகள் திருநெல்வேலி போக்குவரத்துக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.படிப்படியாக பழைய பேருந்துகளை எடுத்துவிட்டு புதிய பேருந்துகளை இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும் முதலமைச்சர் அவர்கள் போக்குவரத்து துறை ஊழியர்களின் கோரிக்கையினை உடனுக்குடன் சரி செய்து வருகிறார்கள். பொதுமக்கள் பண்டிகை காலங்களில் தனது சொந்த ஊருக்கு சென்று பண்டிகை கொண்டாட வேண்டும் என்பதற்காகவே அக்காலகட்டத்தில் அதிகமான பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு சேவை செய்கின்ற துறையாக போக்குவரத்து துறை சிறப்பாக தனது பணியை செய்து வருகிறது.பள்ளி கல்லூரி மாணவர்

களுக்கு போதிய போக்குவரத்து வசதியை ஏற்படுத்தி தரவேண்டும் என்பதே முதலமைச்சர் அவர்களின் உத்தரவு, கொரோனா காலத்தின் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கை அதிகரித்த நிலையில் ஒவ்வொரு பகுதிக்கும் அதிக அளவு பேருந்துகள் கூடுதலாக இயக்கப்பட்டு வருகிறது.என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பேசினார்.

நிகழ்வில் அரசு போக்குவரத்துக்கழக நெல்லை மேலாண்மை இயக்குனர் இளங்கோவன்,பொது மேலாளர் சரவணன்,தொ.மு.ச.பொது செயலாளர் தர்மன், மாவட்ட துணை செயலாளர் சுரேஷ், மாமன்ற உறுப்பினர்கள் உலகநாதன், ஆமீனா சாதிக், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கனகராஜ் ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன்,ராஜன், ஜோசப் பெல்சி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வசூடாமணி, மத்திய மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான்மைதீன்,மகளிர் தொண்டரணி அனிதா, உள்பட கழக நிர்வாகிகள், போக்குவரத்துக் கழக ஊழியர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

புதிய பேருந்தினை துவக்கி வைத்து சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு போக்குவரத்து துறை அமைச்சர் எஸ். எஸ்.சிவசங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் சிறிது தூரம் பயணமாக சென்றனர்.



விக்கிரவாண்டி பேரூராட்சி அ.தி.மு.க 3வது வார்டு பேரூராட்சி கவுன்சிலர், வார்டு செயலாளர் ரமேஷ். விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி முன்னிலையில் கழகத்தில் இணைத்துக் கொண்டார்.விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா. இளந்திரையன், பேரூர் செயலாளர் நயினா முகமது, பேரூராட்சி தலைவர் அப்துல் சலாம், நகர செயலாளர் இரா.சக்கரை, ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிசந்திரன், தே.முருகவேல், நகர பொருளாளர் என்.என்.இளங்கோ,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ. தினகரன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பா.ீ வினோத், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் கோல்டு வெங்கடேசன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆர்.பி.பரத் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

---

## இன்று (ஜூலை 21) நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நினைவு நாள்!



# கலையுள்ள காலமெலாம் கமழும் உன் நினைவுகள்!

**பேராசிரியர் மா.செல்வராசன்**

விழுப்புரம் சின்னய்யா
கணேசனாய்
வெளிப்போந்து
பொழுதெலாம்
நாடகத்தில்
புரண்டெழுந்து
வளர்ந்ததனால்
செழிப்பான நடிப்பிலே
செம்பியன் ஆனநீ
எழுச்சிதரும் அண்ணாவின்
இந்துகண்ட இராச்சியத்தில்
விழித்தெழுந்த சிவாஜியாய்
வேடமிட்டு முழங்கினாய்;
அழுத்திவந்த ஆரியத்தின்
ஆணிவேர் நறுக்கிடும்
மொழிக்கனலை அண்ணா
மூட்டியதை அரிமாவாய்ப்
பொழிந்ததைக் கண்டுளம்
பூரித்த பெரியார்தான்
எழுகவே சிவாஜியாய்
இன்றுமுதல் உன்பெயர்
வழங்கட்டும் சிவாஜியென
வாழ்த்திய வாழ்த்தொரு
வழுவிலா
வரமன்றோ;
வாய்த்ததும் உனக்கன்றோ!

திரையுலகில் புதியதொரு
திருப்பத்தைத் தந்தபடம்;
புரையோடும்
சமுதாயப் புன்மைகளைத்
தகர்த்தபடம்;
இரையாகும் ஏழையர்
எழுச்சியுறச் செய்தபடம்;
அரைவயிற்றுக்
கஞ்சிக்கே
அல்லாடல் சொன்னபடம்;
இருளிலே மதம்கடவுள்
என்றிருந்தோர் ஒழித்தபடம்;
தெருவிலே திரிந்தோரைச்
சிந்திக்க வைத்தபடம்;
பருவத்துக் கைம்பெண்ணோ
படுந்துயரைப் பகர்ந்தபடம்!
கரைமீறும் உணர்ச்சிகளைக்
கலைஞர்தம் கைவண்ணம்
உரையாடல் ஆக்கிட
ஒளிக்கனலாய்த் தெரித்திடச்
சரியாகப் பேசியுன்
சரித்திர நடிப்பாலே
வரையற்ற புகழுற்று
வானத்தைத் தொட்டுவிட்டாய்!
ஒருபடத்தால் உயர்ந்துவிட்டாய்;
உலகெலாம் தெரிந்துவிட்டாய்!
திரும்பிப்பார் மனோகரா
திக்கெலாம் வளர்ந்துவிட்டாய்!

அரைகுறையாய்ப்
பாழ்பட்டே
அடியிலே கிடந்ததமிழ்த்
திரையிலே நின்றொளிரும்
தீச்சுடராய்த் தோன்றியே
விரைந்தெழ அன்றுமுதல்
வீசுகிற புயலாக
இரைந்தோடும்
அருவிஆறாய்
இமயமாய் இனிமையைத்
தருகின்ற தென்றலாய்த்
தமிழ்மணம் பொழிந்திருந்தாய்

கருவிலே நடிப்புடையாய்!
கம்பீர நடையுடையாய்;
உருவிலே அழகுடையாய்;
உரையிலே தெளிவுடையாய்;
பெரும்போதும் நடிப்பொன்றே
பிறந்தபயன் என்றிருப்பாய்;
ஒருபோதும் நேரந்தான்
தவறாத ஒழுங்குடையாய்;
கருமமே உயிரெனக்
காலமெலாம் உணர்ந்திருந்தாய்!
வரும்போதும் போம்போதும்
வாஞ்சையுடன்
உரைத்திருப்பாய்!

இரவிலே நிலவாகி
இருளோட்டும் கதிராகி
வருகின்றாய், எழுகின்றாய்
வளர்கின்றாய்;
வாழ்கின்றாய்!
தெருவிலே, வீட்டிலே
தெரியாத நாளுண்டா?
உருகியே உவந்துமே
ஒன்றியே பார்க்காஉன்
ஒருபடம் இங்குண்டா?
ஒளிராத பொழுதுண்டா?
திருவிடம் உனைப்போற்றத்
திகழுவாய் எந்நாளும்!
நிரந்தரம் உன்புகழ்;
நீள்வையம் கொண்டாடும்;
பரந்தெழும் என்றென்றும்;
பாராட்டிச் செண்டாடும்!
கலையுலகக் குரிசிலே,
கால்நூறு படங்களில்
தலைவனாய்
நடித்தவனே;
சரித்திரம் படைத்தவனே;
இலையுனக்கு ஈடாக
இங்கொருவர் என்கின்ற
நிலையினில்
நின்றவனே,
நெஞ்சங்கள் வென்றவனே,
அலைகளோ ஆழ்கடலில்
அகலாமல் எழுதல்போல்
தொலைவானில் விண்மீன்கள்
சுடராக ஒளிர்தல்போல்
மலைமேலே பனிக்குவியல்
மறையாமல் விளங்கல்போல்
இலைகளும் மரத்துடன்
எழிலாகத் துலங்கல்போல்
விலையிலா மாமணியே,
வெண்சுடர் ஒளிக்கதிரே,
பலநிலா சேர்ந்தொரு
பால்நிலா ஆனதுபோல்
விலகிடா வானிலே
விளங்கிடும் வெளிச்சமே,
மலரெலாம் சேர்ந்தொரு
மலர்த்தோட்டம்
ஆனதுபோல்
பலவண்ண வேடங்கள்
பார்வியக்கப்
பூண்டவனே!
நலமாக ஒவ்வொன்றும்
நாயகனாய் ஆண்டவனே!

உலகமே வியக்கின்ற
ஒப்பற்ற ஒருநடிகர்
திலகமே,எட்டாத
சிகரமே, நடிப்பினில்
அலகிலா விளையாட்டை
ஆடிய செம்மலே!

இலக்கணமும் நீயேதான்,
இறவாமல் நிலைபெறும்
இலக்கியமும்
நீயேதான்,
இலகமுத சுரபியும் நீ,
இனிதூட்டும்
காவிரிநீ,
உலவிடும் தென்றலும்நீ,
ஓங்கிடும் புயலும்நீ!

நிலவிடும் உணர்ச்சிகள்
நின்முகம் மெய்யெலாம்
பலபட வெளிப்படும்,
பாத்திரத்திற்கு ஏற்றபடி
குலவிடும் குரல்வளம்;
குமுறிடும், கொஞ்சிடும்,
கலகல என்றெழும்,
கனிந்திடும், கண்ணீரைப்
பொலபொல எனச்சொரியும்,
பொங்கிடும் வெள்ளமாகும்!

விழியிலே இமையிலே
விரிந்த ஒரு நெற்றியிலே
மொழியிலே
இதழிலே
மூண்டெழும் குரலிலே
சுழியிலே விரலிலே
துடித்திடும் நரம்பிலே
கழுத்திலே கன்னத்தில்
கைகளில் கால்களில்
எழுத்தாக நடிப்பினை
இலக்கியமாய்த் தந்தவனே,
அழுத்தமாய்ப் பதித்தவனே,
ஆலமரம் ஆகிட
விழுதுகள் பற்பல
விளைந்தன உன்னிடம்!
தொழுதுன்றன் வழியிலே
தொடர்ந்தவர் பற்பலர்!
அழுதாலும் சிரித்தாலும
அரிமாவாய் முழங்கினாலும்
பொழுதெலாம் உனக்கிந்தப்
புவியிலே நிகரேது?
எழுதலாம் எவ்வளவோ,
எழுத்தடங்கா அவ்வளவும்!

திரையுலகில் உனைவெல்லத்
திக்கெட்டும் தேடினும்
உரைத்திட ஒருவரின்றி
ஒப்பற்றுத் திகழ்கின்றாய்!
நரைத்திடும் காலமுற்றும்
நாயகனாய் நடித்தவன்நீ!

கரையாத வைரமாம்
கரியாத சூரியனாம்
சரியாத நெடுமலையாம்
சலியாத அலைகடலாம்
வரையாத ஓவியமாம் வடிக்காத
சிற்பமாம்
அரையாத சந்தனமாம்
ஆக்காத பூக்காடாம்
மறையாத வானமாம்
வற்றாத ஆறுமாம்
குறையாத நிலவுமாம்
குன்றாத ஒளியுமாம்!
நிறைவாக நீயென்றும்
நிலவிடும் இயற்கையாம்!

பெருமாளின் அருளாலே
பெருவாய்ப்புப்
பெற்றவனே!
ஒருநாளும் மறவாமல்
உள்ளத்தில் நன்றியுடன்
திருநாளில் சென்றவரின்
சீர்வாழ்த்து வேண்டினாய்,
திருப்பதிப் பெருமாளா?
திரைப்படப் பெருமாளாம்!
வருநாளில் கூட உன்
வழியினர் வணங்கவைத்த
அருமையைப் பண்பாக
அகத்திலே கொண்ட உன்
பெருமையை என்னென்று
பேசிடல் கூடுமோ!

வள்ளலாய்ப் பிறர்க்குநீ
வாரியே கொடுத்ததை
எள்ளளவும் சொல்லாமல்
இருட்டடிப்புச்
செய்துவிட்டாய்!
விள்ளுதல் இழிவென்றும்
விளம்பரம் தாழ்வென்றும்
உள்ளத்தால் சிறந்தவன்நீ;
உயர்குடியில்
பிறந்தவன்நீ!

அண்ணாவின் பேரன்பை
அளவின்றிப் பெற்றநீ
மண்ணாண்ட காமராசர்
மனத்திலே இருத்தினாய்;
கண்ணாகக் கலைஞரைக்
கருதினாய், கடைசிவரை
விண்ணுயர் நட்புடன்
விளங்கினாய், அவருநது
பண்பட்ட நடிப்புக்குப்
பரிசிலைத் தருவதுபோல்
வெண்கலச் சிலைவைத்தார்.
விழிநீரால் நனையவிட்டார்!
நடிப்பிலே விண்ணுயர்ந்தாய்
நயவஞ்ச அரசியல்
படிப்பிலே விழுந்துவிட்டாய்;
பழையதொரு படகிலே
துடுப்பினை ஏந்தினாய்;
சுழலிலே நீந்தினாய்;
தடுப்பின்றி ஆழ்ந்துவிட்டாய்;
தரைதட்டிச்
சாய்ந்துவிட்டாய்!
இடுக்கினால் ஓய்ந்துவிட்டாய்;
இரண்டகத்தால்
சோர்ந்துவிட்டாய்!
கொடுக்கிலே நஞ்சிருக்கக்
கொட்டுவோர் உடனிருந்து
நெடுகவே உனைத்தள்ள
நேரந்தான் பார்த்திருந்தார்;
கடுகளவும் நீஅவர்
கரவினை உணராமல்
படுபொத்தல் கலத்திலே
பலகுளமாய் நீரிறைத்தும்
கெடுதலே தேடினார்!
கேண்மையிலார்
ஓடினார்!

அடுக்கினால் உன்பெருமை
ஆகாயம் தொடும்போது
ஒடுக்கவும் முடியாது:
ஒருநாளும் உன்புகழைத்
தடுக்கவும் இயலாது!
தந்திரம் தெரியாத
கெடுக்கவும் அறியாத
கீழ்மையே புரியாத
கொடுக்கவே தெரிந்தநீ
கொள்ளவும் விழையாமல்
நெடுகவே நடந்துவிட்டாய்;
நீசரைக் கடந்துவிட்டாய்!
தொடுக வா என்றுவான்
தோள்தர என்றும்நீ
முடிதலே இல்லாத
முதல்வனாய் முகிழ்த்துவிட்டாய்!
தொடுதலே முடியாத
தொலைவானம் ஆகிவிட்டாய்;
விடுதலே இல்லை உன்
விதவிதமாம் நடிப்பினை!
நடுதலே நல்லெண்ணம்
நல்குமே படிப்பினை!

சிலையாகிப் போனாலும்
சிவாஜி என்கின்ற
மலையென்றும் நின்றிடும்;
வான்தொட்டு நிமிர்ந்திடும்;
திலகமாய் விளங்கிடும்;
செந்தமிழ் மணந்திடும்;
நிலையிலா உலகிலே
நிலையாகும் புனைவுகள்;
கலையுள்ள
காலமெலாம் கமழ்ந்திடும் நினைவுகள்!